ஐ.டி.எண். 61 /2025 29.06.2026

**தொ.த.சாட்சி – 1 திரு..ஜெயபழனி...**
**குறுக்கு விசாரணை**

26.9.2015 ஆம் தேதி மாலை 4: 20 மணி பேருந்து TN 32 N 3854 வண்டியில் ஓட்டுனராக பணிபுரிந்த பொழுது நான் வண்டியை எதிரே வந்த இரு சக்கர வாகனத்தின் மீது விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டு என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தில் திரு.ஏ. ரவிக்குமார் வயது 35 என்பவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக சின்ன சேலம் ஐ3 காவல் நிலையத்தில் குற்ற எண் 356 2015 பிரிவுகள் 279,304 எ பிரிவின் கீழ் 26.9.2015ஆம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் 28 9 2015 ஆம் தேதி நான் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டேன் என்று சொன்னால் சரிதான். 17. 11. 2015ஆம் தேதி தற்காலிக பணிநீக்கம் உத்தரவு ரத்து செய்யப்பட்டு மீண்டும் நான் பணியில் அமர்த்தபட்டேன் என்று சொன்னால் சரிதான். அதன் தொடர்ச்சியாக 10 12 2015 ஆம் தேதி குற்றச்சாட்டு வணையப்பட்டது என்று சொன்னால் சரிதான். கொடுக்கப்பட்ட குறிப்பாணைக்கு ஏழு நாட்களுக்குள் நான் பதில் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். ஆனால் எனக்கு குறிப்பாணைவழங்கப்படவில்லை. ஒழுங்கு நடவடிக்கையின் உத்தரவை நான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி உள்ளேன் என்று சொன்னால் சரிதான். விசாரணை நடக்கும் பொழுது நான் விசாரணையில் பங்கு கொண்டேன் என்று சொன்னால் சரிதான். ஆவணம் 4ல் பக்கம் 4ல் உள்ளது எனது கையெழுத்து என்று சொன்னால் சரிதான். எனக்கு வேறு சாட்சிகள் விசாரிக்க வேண்டியதில்லை என்று எனது தரப்பில் ஆவணங்களை ஏதுமில்லை என்று தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற தீர்ப்புரை ஆவணம் 5 ஆக ஆஜர் படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் நாங்கள் செட்டில்மெண்ட் செய்தோம் என்றும் தண்டனை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை முத்தரப்பு பேச்சுவார்த்தையில் கையெழுத்தாகியுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. தண்டனை கொடுக்கப்பட்டு இறுதி ஆணையின் பெயரில் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன்

சான்று ஆவணம் 7ல் கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது தேதி போட மறந்துவிட்டேன். 8 7 2022–ம் தேதி நான் கருணை மனு கொடுத்துள்ளேன். 90 நாட்களுக்குள் நான் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும் என்று 5,6 வருடங்கள் கழித்து கருணை மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நிர்வாகத்தால் கொடுக்கப்பட்ட குறிபானைக்கு நான் பதிலளிக்கவில்லை என்றும் இறுதி ஆணை வழங்கப்பட்டு விளக்கம் கூறப்பட்டது என்றும் அதற்கும் நான் பதில் அளிக்கவில்லை என்றும் இறுதி ஆணை பிறப்பித்து நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றும் செட்டில்மென்ட் ரத்து ஆகாத காரணத்தினால் எனக்கு கொடுக்கப்பட்ட பனிஷ்மென்ட் உறுதி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல .

மறுவிசாரணை இல்லை.

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI Digitally signed by PACKIAJOTHI

Presiding Officer